# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | மணிவாசகம் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | சின்னாக்கவுண்டர் | தொழில் | .. | தறி கூலி |
| வயது | .. | 61 | ஜாதி | .. | கவுண்டர் |
| கிராமம் | .. | பள்ளக்குழி | நாள் | .. | 16.02.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. மணிவாசகம் என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

குறுக்கு விசாரணை .. 16.02.2022

அசல் வழக்கு எண் .. 49/2009

**2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்று கூறி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்தானது 05.06.2008 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின்படி எனக்கு உரிமையானது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சொத்தை யார் யாரிடம் இருந்து வாங்கியது என்றால் சிவராமன் மற்றும் பாலசுப்ரமணியம் என்பவர்களிடம் இருந்து கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே இந்த வழக்கின் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் இந்த வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திருந்தது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். கிரைய ஒப்பந்தம் குறித்து உங்களுக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் நான் சொத்தை வாங்கி 2 மாதத்திற்கு பிறகு தான் தெரிய வந்தது. கிரைய ஒப்பந்த பத்திரம் நான் கிரையம் வாங்கி தேதிக்கு முன்னதாகவே ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதியான 11.03.2008 தேதி முதலே 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வாங்கிய சொத்தில் யார் யார் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்பது தெரியாமல் தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 2 முதல் 4 வரை

பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் அதை தெரிந்தே தான் நான் வழக்கு சொத்தை வாங்கினேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் 1 ஆம் பிரதிவாதி மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.217/2008 என்ற வழக்கை தாக்கல் செய்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இப்போது அதை தெரிந்து கொண்டேன் என்றால், நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற பிறகு தான் தெரிந்து கொண்டேன். வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் சுண்டமேட்டுர் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அதன் விஸ்தீரம் தெரியுமா என்றால் தெரியும். 39 செண்டாகும். வழக்கு சொத்திற்கான நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை வாங்கும் போது மூலப்பத்திரத்தை பார்த்துதான் வாங்கினீர்கள் என்றால் பார்த்து தான் வாங்கினேன். அந்த மூல வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக மூல ஆணவ பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அதை தாக்கல் செய்ய வேண்டும் என்று தெரியாது. அந்த மூலப்பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் பச்சமுத்து என்பவரிடம் உள்ளது. பாலசுப்ரமணியம் என்பவர் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு போகவர பழக்கம். நான் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். பச்சமுத்து என்பவரும் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். பச்சமுத்துவின் நிலத்திற்கு பக்கத்தில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு 217/2008 வழக்கில் 02.09.2008 அன்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்று மனு எண்.26/2012 தற்பொழுது இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நிறைவேற்று மனுவில் 1 ஆம் பிரதிவாதி என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிறைவேற்று மனுவில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். பாலசுப்ரமணியம் என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்பதை தெரியாமல் தான் நான் அந்த வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 11.03.2008 தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் கேட்டுள்ளேன். அவ்வாறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.217/2008 தீர்ப்பாணை செல்லாது என கேட்டுள்ளீர்கள் என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் இருந்த போது தான் பச்சமுத்துவிற்கு நிலத்தை விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல, நான் வழக்கு

தாக்கல் செய்து தீர்ப்பை பெற்ற பின்புதான் விற்றேன். பச்சமுத்து வழக்கு சொத்தை அவருடைய மகன் அருள்முருகன் என்பவருக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இன்றைய தேதியில் தாவா சொத்திற்கு நீங்கள் உரிமையாளர் கிடையாது என்றால் சரிதான். நான் உரிமையாளர் இல்லை என்பதால் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை நீங்கள் எவ்வளவு தொகைக்கு வாங்கினீர்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆவணத்தை பார்த்து சொல்ல முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தின்படி வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.88,200/- என்று சொன்னால் சரிதான். நீங்கள் பச்சமுத்துவிற்கு எவ்வளவு தொகைக்கு விற்றீர்கள் என்பது ஞாபகம் உள்ளதா என்றால் ரூ.88,300/-க்கு விற்றுள்ளேன். நான் வழக்கு சொத்தை வாங்கிய பிறகு 1 வருடம் கழித்து தான் பச்சமுத்துவிற்கு விற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை நஷ்டத்தில் தான் பச்சமுத்துக்கு விற்றுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது மகுடஞ்சாவடி செல்லும் சாலையில் ஒட்டியே உள்ளது என்றால் சரிதான். நான், பாலசுப்ரமணியம் மற்றும் பச்சமுத்து ஆகியோர்கள் சேர்ந்து 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்றுதான் கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை வாங்கும் போது 2 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்படுத்தியிருந்த கிரைய ஒப்பந்த பத்திரம் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்திருக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகள் ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு கிரைய பத்திரம் ஏற்படுத்தினேன் என்றாலும் சரியல்ல. இன்று வரை 2 முதல் 4 பிரதிவாகள் தான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் நல்லெண்ணத்தோடு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதால் தான் இந்த வழக்கு சொத்தின் மூல ஆவணம் அவர்களிடமே உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பற்றி எனக்கு ஏதும் தெரியாததால் தான் வா.சா-1-ன் சக்கு பந்தி குறித்த எந்த விபரமும் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

ஒப்பம் / மணிவாசகம்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.